இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 339 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 03 – புதன்கிழமை 19 ஜூலை 2023 – திருச்சி ★★ 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 81 - Issue 339: Thiruvalluvar Year - 2054 - Aadi 03 - Wednesday 19 July 2023 - Trichy ★★ 12 + 12 Pages ₹5.00





கர்நாடகா மாநிலம், பெங்களூருவில் நேற்று முன்தினம் (17.7.2023) மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா, திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் தில்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முக்தி மோர்சா கட்சியின் தலைவரும், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சருமான ஹேமந்த் சோரன், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி, சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் தலைவரும், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சருமான லல்லு பிரசாத் யாதவ், பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், சிவ சேனா கட்சித் தலைவரும், மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சருமான உத்தவ் தாக்கரே, ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் திருமதி மெகபூபா முப்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே. எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## அமலாக்கத்துறை சோதனை!

# பா.ஜ.க.வின் திசை திருப்பும் நாடகம்!

## சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஜூலை 19 -**

**“அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத் துறை சோதனை நடத்துவது பா.ஜ.க.வின் திசைதிருப்பும் நாடகம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பெங்களூருவுக்கு புறப்பட்டுச் செல்கையில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.7.2023) பெங்களூருவில் நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்பாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

மோடி அவர்கள் தலைமையில் இருக்கின்ற பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்பதற்காக இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து, ஏற்கனவே பீகார் மாநிலம், பாட்னாவில் எதிர்க்கட்சித் தலைவர் கூட்டத்தைக் கூட்டி அதில் சில முடிவுகளை எடுத்தோம்.

அதைத்தொடர்ந்து, இன்றும், நாளையும் இரண்டு நாட்கள் கர்நாடக மாநிலத்தில் இருக்கக்கூடிய பெங்களூரில் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற இருக்கிறது. அந்த கூட்டத்தில் 24 கட்சியினுடைய தலைவர்கள் பங்கேற்க இருக்கிறார்கள். பீகாரிலும், தொடர்ந்து கர்நாடக மாநிலத்திலும் பி.ஜே.பி.யை வீழ்த்துவதற்காக தொடர்ந்து கூட்டப்படக் கூடிய கூட்டம் இது.

### வழக்கை அமைச்சர் பொன்முடி சட்ட ரீதியாகச் சந்திப்பார்!

இந்த எதிர்க்கட்சிகள் கூட்டம் பி.ஜே.பி. ஆட்சிக்கு மிகப்பெரிய எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. அதனுடைய வெளிப்பாடுதான். அமலாக்கத்துறை இன்றைக்கு அவர்களால் ஏவப்பட்டு, ஏற்கனவே வடமாநிலப் பகுதிகளில் அந்தப் பணிகளை செய்து கொண்டிருந்தவர்கள், தற்போது தமிழ்நாட்டிலும், அந்தப் பணியை தொடங்கி இருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றியெல்லாம் கிஞ்சிற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் கவலைப் படவில்லை.

இன்றைக்கு, உயர்கல்வித் துறை அமைச்சராக இருக்கக் கூடிய பொன்முடி அவர்கள் இல்லத்தில், அமலாக்கத் துறையின் மூலமாக சோதனை நடத்தப்படுகிறது என்று சொன்னால், இந்த வழக்கை பொறுத்தவரையில், அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, புனையப்பட்ட பொய் வழக்கு இந்த வழக்கு. ஏறக்குறைய 13 ஆண்டு காலத்திற்கு முன்பு போடப்பட்ட வழக்கு. தொடர்ந்து 10 ஆண்டுகாலம் அ.தி.மு.க. தான் ஆட்சியில் இருந்திருக்கிறது. அப்போதெல்லாம், இதைப்பற்றி எந்த முயற்சியிலும் அவர்கள் ஈடுபடவில்லை. அண்மையில் கூட பொன்முடி அவர்கள் மீது கடந்த கால ஆட்சியாளர்களால் சுமத்தப்பட்டிருந்த இரண்டு வழக்குகளிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார். ஆகவே, இந்த வழக்கைப் பொறுத்தவரையிலே சட்டரீதியாக அவர் இதனை நிச்சயமாக சந்திப்பார்.

### தமிழ்நாடு ஆளுநர் தேர்தல் பிரச்சாரம்!

எது, எப்படி இருந்தாலும், வர இருக்கக் கூடிய நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், இதற்கெல்லாம் நிச்சயமாக மக்கள் பதில் வழங்குவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஒரே வரியில் சொல்லவேண்டும் என்று சொன்னால், பீகாரிலும், கர்நாடக மாநிலத்திலும் இதைத் தொடர்ந்து இன்னும் பல மாநிலங்களில் நடைபெறவிருக்கக்கூடிய இந்த கூட்டத்தின் நோக்கத்தை திசை திருப்புவதற்காக, அவர்கள் செய்து கொண்டிருக்கக்கூடிய தந்திரம்தான் தவிர, வேறல்ல. இதை எல்லாம் நிச்சயமாக எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய நாங்கள் சமாளிப்பதற்கு தயாராக இருக்கிறோம்.

**கேள்வி :-** உங்களுக்கு கொடுக்கக்கூடிய நெருக்கடியாக பார்க்கிறீர்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:-** ஏற்கனவே தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் ஆளுநர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தை எங்களுக்காக நடத்திக் கொண்டிருக்கிறார். இப்போது அமலாக்கத்துறையும் சேர்ந்திருக்கிறது.

ஆகவே, தேர்தல் வேலை எங்களுக்கு சுலபமாக இருக்கும் என்று தான் நான் கருதுகிறேன்.

**கேள்வி :-** கடந்த முறை நீங்கள் பீகார் சென்ற போது அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்கள் வீட்டில் ரெய்டு நடந்தது, பிறகு இரண்டாவது முறையாக பெங்களூர் செல்லும் போது அமைச்சர் பொன்முடி அவர்கள் வீட்டில் ரெய்டு நடக்கிறது, இதை எப்படி பார்க்கிறீர்கள்?


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

# தென் மாவட்டங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம்!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு செய்திக்கட்டுரை!

**மதுரை, ஜூலை 19-**

**மதுரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் மதுரைக்கு மட்டுமல்ல; தென் மாவட்ட மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதம் என்று அங்கு செல்கின்ற வாசகர்கள் கருதுவதாக ‘தி இந்து’ ஆங்கில நாளேடு நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.**

அச்செய்தி வருமாறு:-

மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த சனிக்கிழமையன்று திறந்தார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அந்த நூலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாசகர்கள் திரண்டு வந்து அங்குள்ள புத்தகங்களை காண்பதை காண முடிந்தது.

மதுரைக்கு மட்டுமல்ல; தென் மாவட்ட மக்கள் அனைவருக்குமே இந்த நூலகம் ஒரு வரப்பிரசாதம் என்று அங்கு வருகை தந்த வாசகர்கள் கருத்து தெரிவித்தனர்.

நூலகத்திற்குள் நுழைந்தவுடனே, மதுரையின் பெருமைகளை விளக்கும் புகைப்படங்கள் அடங்கிய கேலரி பகுதியினை வாசகர்கள் காண முடிகிறது.

சிறுவர்களின் ‘காமிக்’ புத்தகங்களை விரும்பிப் படிக்கும் 9ஆம் வகுப்பு மாணவன், தான் விரும்பும் காமிக் புத்தகம் இங்கு ஏராளமாக இருப்பதால், இனி இங்கு அடிக்கடி வரப் போவதாக கூறினான்.

அனைத்துத் தரப்பினரும் விரும்பிப் படிக்க அனைத்து வகையான புத்தகங்களும் இங்கிருப்பதாக என்.எம்.புண்ணிய மூர்த்தி என்கிற வியாபாரி, இங்கு வந்திருந்தபோது தெரிவித்தார்.

அவர் தனது மனைவி, மகன்களுடன் வந்திருந்தபோது, அவரது மகன்கள் அவர்களுக்கான புத்தகங்களை தேடுவதில் ஒருபுறம் மும்முரமாக இருந்ததாகவும், இன்னொருபுறம் அவரது மனைவி சமையல் பண்டங்கள் புத்தகங்கள் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் இப்படி ஒவ்வொருவரும் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ற புத்தகங்களை தேடிப் படிக்கும் வகையில் பல்வேறு புத்தகப் பிரிவுகள் இருப்பது குறித்து அவர் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்த நூலகத்தில் உள்ள கலந்துரையாடும் பிரிவு தம்மை வெகுவாகக் கவர்ந்ததாக கே.ஜாகிர் உசேன் என்ற வாசகர் தெரிவித்தார்.

பொதுவாக நூலகம் என்றால் மிகவும் குறுகலான அறையில் அடுக்கி வைக்கப்பட வேண்டிய புத்தகங்கள் தாறுமாறாக இருக்கும். ஆனால் இங்கு விசாலமான அறை இருப்பதால் நன்கு நூல்களை படிக்க வசதியாக இருக்கிறது என்று குறிப்பிடும் என்.கீதா தேவி என்கிற வாசகி, இங்கு காட்சிபடுத்தக் கூடிய படிக்கும் முறை உள்ளதால் சிறுவர்கள் தாங்கள் படிக்க உள்ளதை புரிந்து கொண்டு கற்க வசதியாக இருக்கிறது என்று பாராட்டு தெரிவித்தார்.

ஆர்ட் காலரி இருக்கும் தரைத் தளத்திலேயே மாற்றுத் திறனாளிகளுக்கான பிரிவு இருக்கிறது. முதல் தளத்தில் சிறுவர் பிரிவும், அறிவியல் புத்தகப் பிரிவும் உள்ளன.

இரண்டாம் தளத்தில் தமிழ்ப் புத்தகங்களும், மூன்றாம் தளத்தில் ஆங்கிலப் புத்தகங்களும், நான்காம் தளத்தில் குறிப்பெடுக்கும் பிரிவும் உள்ளன.

ஐந்தாம் தளத்தில் இ-லைப்ரரி என்று சொல்லப்படும் மின் நூலகமும், ஆறாவது தளத்தில் குறிப்புப் புத்தகங்கள் படிக்கும் பகுதிகளின் விரிவாக்கமும், நிர்வாக அலுவலகமும் அமைந்துள்ளன.

THE HINDU

அனைத்து நாட்களிலும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை நூலகம் திறந்திருக்கும் என்று தலைமை நூலகர் சி.அமுதவல்லி தெரிவிக்கிறார். வருடத்தில் 8 அரசின் விடுமுறை நாட்களில் மட்டும் நூலகம் மூடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

பல்வேறு அரிய நூல்களும் இங்குள்ளதாகக் குறிப்பிடும் அவர், அனைத்து தமிழ்ப் புத்தகங்களும் கணக்கெடுக்கப்பட்டு குறியிடப்பட்டு விட்டன என்றும், ஆங்கிலப் புத்தகங்கள் குறியிடப்பட்டவுடன் அடுத்த 15 நாட்களுக்குள் உறுப்பினர் சேர்க்கை தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

இந்த கலைஞர் நூலகத்தில் அனைவரையும் கவரும் வசதிகளில் ஒன்று, முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களுடன், சேர்ந்து அமர்ந்து இருக்கும் அனுபவத்தை அளிக்கும் உணர்ச்சிகரமான ஏற்பாடாகும்.

பன்னோக்கு வசதிகளுடன் கூடிய மிகப் பெரிய அறை மற்றும் பார்வையாளர் கூடம் என்று கூறப்படும் ஆடிட்டோரியம் இந்த நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு வரும் வாசகர்கள் அங்குள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறக்கப்பட்ட கலைஞர் சிலை முன் ‘செல்பி’ எடுத்துக்கொள்வதை காண முடிந்தது.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியாகி உள்ளது.